இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்

பாராளுமன்றம்

# 1990 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க,

# மருத்துவத் தேவைகள் (திருத்தச்) சட்டம்

*[1990, செத்தெம்பர் மாதம் 06 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.*

*1990, செத்தெம்பர் மாதம் 07 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டுள்ளது.*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

கொழும்பு அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

விலை : சதம் 30 | தபாற் செலவு : ரூபா 1·00

**1990 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க, மருத்துவத் தேவைகள் (திருத்தச்) சட்டம்.**

[1990, செத்தெம்பர் மாதம் 06 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]

ச. வ.—ஓ 28/89

**மருத்துவத் தேவைகள் கட்டளைச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்.**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

1. இச்சட்டம் 1990 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க, மருத்துவத் தேவைகள் (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம். **சுருக்கப் பெயர்.**

2. இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும் மருத்துவத் தேவைகள் கட்டளைச்சட்டத்தின் 10 ஆம் பிரிவு, அதன் பந்தி (ஆ) வை நீக்கிவிடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது. **226 ஆம் அத்தியாயத்தின் 10 ஆம் பிரிவைத் திருத்துதல்.**

3. முதன்மைச் சட்டவாக்கத்தின் 14 ஆம் பிரிவு, அப்பிரிவின் பந்தி (ஆ) வை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பந்தியை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :— **முதன்மைச் சட்டவாக்கத்தின் 14 ஆம் பிரிவைத் திருத்துதல்.**

"(ஆ) எவரேனும் நோயுற்ற தொழிலாளி அல்லது தொழிலாளிகளைக் கவனிக்கும் நோக்கத்திற்காக ஒரு தோட்டத்திற்கான வருகையொன்று தொடர்பில், 10 ஆம் பிரிவின்கீழ்.".

4. முதன்மைச் சட்டவாக்கத்தின் 30 ஆம் பிரிவு, அப்பிரிவின் பந்திகள் (ஆ), (இ) அத்துடன் (ஈ) என்பவற்றை நீக்கிவிடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது. **முதன்மைச் சட்டவாக்கத்தின் 30 ஆம் பிரிவைத் திருத்துதல்.**

5. முதன்மைச் சட்டவாக்கத்தின் 31 ஆம் பிரிவு, அப்பிரிவின் பந்தி (ஆ) இல் "அல்லது தாபரிப்பு" என்ற சொற்களை விட்டுவிடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது. **முதன்மைச் சட்டவாக்கத்தின் 31 ஆம் பிரிவைத் திருத்துதல்.**

6. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும். **ஒவ்வாமையின் விடயத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.**

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 ; (வெளிநாடு) ரூபா 1,849 ; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்குமுன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், கொழும்பு 1 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.